

# 17

# سُوْرَةُ الضُّحٰى

# ஸூறதுல் ழுஹா

அல்லாஹ்வின் அருள் வேதமான அல்குர்ஆனில் ஸூரா ழுஹா 93 ஆவது அத்தியாயமாகும். இந்த ஸூரா 11 ஆயத்துக்களைக் கொண்டது. இதில் 40 சொற்கள் 164 எழுத்துக்கள் காணப்படுகின்றன. ஸூரத்துல் பஜ்ரை அடுத்து மக்காவில் அருளப் பட்ட இந்த ஸூராவின் முதல் ஆயத்தும் முதல் சொல்லுமான அல்ழுஹா என்ற பதமே இதற்குப் பெயராகச் சூட்டப்பட்டுள்ளது. இதன் கருத்து முற்பகல் என்பதாகும்.

## அருளப்பட்ட பின்னணி

முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறைவனிடமிருந்து வந்து கொண்டிருந்த வஹி சில காலங்கள் தாமதமாகியது. ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களுடனான தொடர்பும் துண்டிக்கப்பட்டது. இதனை அறிந்துகொண்ட முஷ்ரிக்குகள் எள்ளிநகையாடினர். முஹம்மதை அவருடைய இறைவன் கைவிட்டுவிட்டான். அவரிடம் வந்து சென்ற ஷைத்தானின் வருகையும் முற்றுப்பெற்றுவிட்டது. இவ்வாறு கேலி செய்தவர்களுள் அபுலஹபின் மனைவி அல் அவ்ரா பின்த் ஹர்ப் குறிப்பிடத்தக்கவளாவாள். எதிரிகளின் விமர்சனங்கள், கேலிப்பேச்சுக்கள் என்பவற்றால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மனச்சோர்வுற்றிருந்த சந்தர்ப்பத்திலேயே இந்த ஸூரா அருளப்பட்டது.

## ஸூராவும் அதன் பொருளும்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

وَالضُّحٰى ۝١ وَالَّيْلِ اِذَا سَجٰى ۝٢ مَا وَدَّعَكَ رَبُّكَ

وَمَا قَلٰى ۝٣ وَلَلْاٰخِرَةُ خَيْرٌ لَّكَ مِنَ الْاُوْلٰى ۝٤ وَلَسَوْفَ

يُعْطِيْكَ رَبُّكَ فَتَرْضٰى ۝٥ اَلَمْ يَجِدْكَ يَتِيْمًا فَاٰوٰى ۝٦

وَوَجَدَكَ ضَآلًّا فَهَدٰى ۝٧ وَوَجَدَكَ عَآئِلًا فَاَغْنٰى ۝٨

فَاَمَّا الْيَتِيْمَ فَلَا تَقْهَرْ ۝٩ وَاَمَّا السَّآئِلَ فَلَا تَنْهَرْ ۝١٠

وَاَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ ۝١١

முற்பகல் மீது சத்தியமாக

ஒடுங்கிக் கொள்ளும் இரவின் மீது சத்தியமாக

உம்முடைய இறைவன் உம்மைக் கைவிடவுமில்லை; அவன் (உம்மை) வெறுக்கவுமில்லை.

மேலும் பிந்தியது (மறுமை) முந்தியதை (இம்மையை) விட உமக்கு மேலானதாகும்.

இன்னும், உம்முடைய இறைவன் வெகு சீக்கிரம் உமக்கு (உயர் பதவிகளைக்) கொடுப்பான்; அப்பொழுது நீர் திருப்தியடைவீர்.

(நபியே!) அவன் உம்மை அநாதையாகக் கண்டு, அப்பால் (உமக்குப்) புகலிடமளிக்கவில்லையா?

இன்னும், உம்மை வழியற்றவராகக் கண்டு அவன், (உம்மை) நேர்வழியில் செலுத்தினான்.

மேலும், அவன் உம்மைத் தேவையுடையவராகக் கண்டு, (உம்மைச் செல்வத்தால்) தேவையில்லாதவராக்கினான்.

எனவே, நீர் அநாதையைக் கடிந்து கொள்ளாதீர்.

யாசிப்போரை விரட்டாதீர்.

மேலும், உம்முடைய இறைவனின் அருட்கொடையைப் பற்றி (பிறருக்கு) அறிவித்துக் கொண்டிருப்பீராக.

## மையக் கருத்து

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு இறைவனிடமிருந்து வந்த வஹி திடீரென நின்றுவிட்டது. இதனால் இறை நேசத்தின் சுகந்தம் அறுபட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தாங்கிக்கொள்ள முடியாத துன்பத்திற்காளாகி வெறுமையுணர்வுடன் தனிமைப்பட்டவர் போல் கவலையுற்றிருந்தார்கள். இந்த சூழ்நிலையில் தான் இந்த ஸூரா இறங்கியது. இது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது அன்பு, அரவணைப்பு, பாசம், பரிவு, கருணை, கனிவு, நேசம், பற்று, நம்பிக்கை ஆகிய அனைத்தையும் அள்ளிப் பொழிந்தது. இதனால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அளவில்லா மகிழ்ச்சியடைந்தார்கள்.

உம்மைக் கைவிடவுமில்லை; புறக்கணிக்கவுமில்லை; மறக்கவுமில்லை; உம் மீது சினம் கொள்ளவுமில்லை; உம்மை ஒருபோதும் கைவிடமாட்டோம். உமக்கு எக்குறையையும் வைக்கவும் மாட்டோம். இவ்வுலகில் வழங்கியிருக்கும் நன்மைகளை விட மிகச் சிறப்பானவை உமக்கு மறுமையில் காத்திருக்கின்றன போன்ற வசனங்கள் மூலம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஆறுதல் கூறுகிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மீது அல்லாஹ் அன்பையும் பாசத்தையும் பொழிந்துள்ளான். அநாதையாய்ப் பிறந்த அவரை அவன் அரவணைத்தான், அன்பைச் சொரிந்தான். வறுமையிலிருந்த அவர்களுக்கு வளமான வாழ்வளித்தான் என்று குறிப்பிட்டுக் காட்டுகிறது.

இறுதியாக அநாதைகளை அதட்டவோ அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தவோ அவர்களை இழிவுபடுத்தவோ கேவலப்படுத்தவோ தண்டிக்கவோ கூடாது. அவ்வாறே யாசகம் கேட்போரிடம் மென்மையாகவும், கண்ணியமாகவும் நடந்து கொள்ளுமாறு பணிக்கிறது.

## ஸூரா தரும் போதனைகள்

1. நல்லடியார்களை இறைவன் கைவிடமாட்டான் அவர்களுக்கு எப்போதும் இறைநேசமும் பாசமும் கிடைத்துக்கொண்டேயிருக்கும் என்ற நம்பிக்கை ஊற்றை உள்ளங்களில் ஆழப் பதியச் செய்கிறது.
2. இவ்வுலகிலும் மறு உலகிலும் இறைவன் நல்லதையே தருவான். இங்கிருப்பதை விட அங்கிருப்பவை மிகவும் மேலானவை என்று கூறுவதன் மூலம் மறுமை வாழ்வில் ஆசையைத் தூண்டுகிறது.
3. அநாதைகளைக் கவனிக்க வேண்டும். அவர்களுக்கு புகலிடம் அளிக்க வேண்டும், யாசிப்பவர்களுக்கு கொடுத்து உதவ வேண்டும், ஒருபோதும் அவர்களை இழிவுபடுத்தவோ இம்சைப்படுத்தவோ கூடாது முதலான போதனைகளைக் கற்றுத் தருகிறது.
4. இறைவன் தந்த பேரருள்களை எடுத்துரைப்பதும் அவற்றுக்காக இறைவனுக்கு நன்றிக் கடனை முழுமையாக செலுத்துவதும் அவசியம் என்பதை உணர்த்துகிறது.

### பயிற்சி

அ. சரி பிழை கூறுக.

1. ஸூரா ழுஹா, ஒரு மதனி ஸூராவாகும். ( )
2. ஸூரா ழுஹா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு ஆறுதல் அளிப்பதாக அமைந்துள்ளது. ( )
3. இறை அருட்கொடைகளை மறைக்கக் கூடாது. ( )
4. விரும்பினால் அநாதைகளை ஆதரிக்கலாம். ( )

ஆ. இடைவெளி நிரப்புக.

1. ஸூரா ழுஹாவில் .............. ஆயத்துகள் காணப்படுகின்றன.
2. இந்த ஸூரா ................................ ஆகியோரை சிறப்பாக பராமரிக்க வேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டுகிறது.
3. ஸூரா ழுஹா என்பதன் கருத்து .................. ஆகும்.

### செயற்பாடு

ஸூரா ழுஹாவின் ஊடாக நீங்கள் கற்றுக்கொண்ட முக்கிய படிப்பினைகள் ஐந்தினை எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.